**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**
**O.S. No.125/2016**

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 – ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 11.09.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ்வரி | ஜாதி | : | |
| க /பெயர் | : | சுந்தரேசன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை

தாவா சொத்திற்கு 2007 ஆம் ஆண்டிலிருந்து பயிர் காப்பீடு, இன்சுரன்ஸ், அரசு வழங்கிய வறட்சி, வெள்ள நிவாரண தொகை பெறவில்லை என்றாலும், நடவு செய்யவில்லை என்றாலும் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதிகள் தான் நிவாரணங்கள் வாங்கி வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக பிரதிவாதிகள் நிவாரணங்கள் வாங்கி வருவது தொடர்பாக ஆட்சேபணை தெரிவித்து மனு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

2. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் என் மருமகன் தமிழரசனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குரையில் நான் வெளியூர் சென்றதாக சொல்லியுள்ள5 தேதி என்னவென்றால் சரியாக தெரியவில்லை. எனது வழக்குரையில் ஜூலை 2016–ல் பிரதிவாதிகள் நான் வெளியூரில் இருந்த சமயத்தில் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

கடந்த 2016க்கு முன்பு தாவா சொத்திற்கு நான் எவ்வித வாய்தாவும் செலுத்தவில்லை என்றால் சரிதான். எனக்காகவும், என் மருமகன் பிரதிவாதி கண்ணனிடம் ஒப்பந்தம் செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி விவரங்களை மறைத்து தான் நான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தினை விற்பனை செய்த காலத்தைவிட

தற்போது அதன் மதிப்பு அதிகமாகிவிட்டதால் பொய்யான விவரங்களை கூறி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் இறந்துவிட்டபடியால் எனது மகள்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் தாவா சொத்து எனக்கு சொந்தமானது என விளம்புகை பரிகாரம் கேட்காமல் சுவாதீன பரிகாரம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தல்ல என்பதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.18 09:18:02 +0530

District Munsif
Mannargudi.